“எதிர்க்கட்சிகளும், எதிர் கருத்துக்களும் தான் ஒன்றிய அரசுக்குப் பிரச்சினை”

சபாநாயகரின் புதிய உத்தரவு ஜனநாயகத்துக்கு விரோதமான செயலாகவே உள்ளது!

நாடாளுமன்ற கழக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி பேட்டி!

புதுடெல்லி, மார்ச் 22 – தொகுதி மறுவரையறை பற்றி விவாதம் நடத்த வேண்டும் என நாடாளுமன்றத்தில் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. ஆனாலும், நாடாளுமன்றத்தில் இதுகுறித்து விவாதிக்க அனுமதி தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது. இதனால், தி.மு.க.மற்றும் இந்தியா கூட்டணி கட்சி எம்.பிக்கள் நாடாளுமன்ற வளாகத்தில் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் தொகுதி மறுவரையறை குறித்து வாசகங்கள் அடங்கிய டிஷர்ட் அணிந்து கொண்டு சென்றனர். மக்களவையில் இதுகுறித்து விவாதம் நடத்த தொடர்ந்து வலியுறுத்தினர். ஆனால், தொடர் அமளி காரணமாக அவை தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு, நாளை வரை அவையை ஒத்திவைத்து சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார்.

அவை ஒத்திவைக்கப்பட்டதை அடுத்து நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்த திமுக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கூறியதாவது;

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்வைத்த மிக முக்கியமான தொகுதி மறுசீரமைப்பு என்ற பிரச்சனையை, திராவிட முன்னேற்றக் கழகமும், இந்தியா கூட்டணிக் கட்சிகளும் பாராளுமன்றத்தில் தொடர்ந்து எழுப்பிக் கொண்டிருக்கிறோம். நாடாளுமன்றத்தில் தொகுதி மறுசீரமைப்பு பற்றி விவாதம் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வைத்துக்கொண்டே இருக்கிறோம். ஆனால், அதைப் பற்றி விவாதிக்கவும், பேசவும் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் அனுமதிக்கவில்லை.

உடைகளில் குறை கண்டுபிடிப்பதா?

இன்று நாடாளுமன்ற வாயிலில் ஆர்ப்பாட்டம் நடத்திவிட்டு, மக்களவையில் தொகுதி மறுசீரமைப்பு குறித்துப் பேச வேண்டும் என்று நாங்கள் எழுந்து நின்று கோரிக்கை வைத்த போது, முன் எப்பொழுதும் இல்லாத வகையில் அவை தலைவர், எங்களுடைய உடைகளின் குறையைக் கண்டுபிடித்து டிஷர்ட் (TShirt) அணிந்து அவைக்கு வரக்கூடாது என்ற ஒரு புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட சட்டத்தைச் சொல்லி, நீங்கள் சட்டை மாற்றவில்லை என்றால் அவை நடக்காது என்று ஒரு விஷயத்தை முன்வைத்தார்.

நாங்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காரணத்தினால் மக்களவை ஒத்திவைக்கப்பட்டது. அடுத்த முறையும், அவை கூடியபோது நாங்கள் சட்டையை மாற்றாமல், எங்களுடைய கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தினோம். அதைத் தொடர்ந்து, இன்று நாள் முழுவதும் அவை ஒத்திவைக்கப்பட்டதாக அறிவித்தார்.

இதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் பல முறை, வாசகங்கள் பாதிக்கப்பட்ட முகக்கவசம், உடைகள், சால்வைகள் அணிந்து எதிர்க்கட்சி எம்.பிக்கள் வந்துள்ளார்கள். ஆளுங்கட்சி எம்.பிக்கள் கூட, அவர்களின் நம்பிக்கைகளையும், கருத்துக்களையும் வலியுறுத்தக் கூடிய கருத்துக்கள் பாதிக்கப்பட்ட சால்வைகளை போட்டுக் கொண்டு அவையில் அமர்ந்து இருக்கிறனர். ஆளுங்கட்சியினர் செய்யும்போது, ஏற்றுக்கொள்ளக்கூடிய அவை தலைவர், எங்களை மட்டும் அவையை விட்டு வெளியேற சொல்கிறார். எங்களை மட்டும் உடையை மாற்றிக் கொண்டு வர வேண்டும் என்று கட்டளையிடும் போது, இது ஜனநாயக விரோதமாகவும், எதிர்க்கட்சிகளுக்கு விரோதமான செயலாகத்தான் பார்க்க முடிகிறது.

தொகுதி மறு சீரமைப்பு பிரச்சினையை எழுப்பக் கூடாதா?

ஒன்றிய அரசுக்கு உடை பிரச்சனையா இல்லை தொகுதி மறுசீரமைப்பு என்ற பிரச்சனையை எழுப்பக்கூடாத? என்ற செய்தியாளரின் கேள்விக்கு, உடை பிரச்சனையோ, தொகுதி மறுசீரமைப்பு என்ற பிரச்சனை இல்லை. எதிர்க்கட்சிகள் இல்லாமல் அவையை நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் ஒன்றிய அரசுக்கு இருக்கிறது. எதிர்க் கட்சிகளும், எதிர்க் கருத்துக்களும் ஒன்றிய அரசுக்குப் பிரச்சனை தான்.

மேலும், எதிர்க் கருத்துக்களே இல்லாத, பாஜகவின் எம்.பிக்களை போல வாழ்க வாழ்க என்று கோஷம் எழுப்பினால், அவை அமைதியாகவும், சிறப்பாகவும் நடப்பதாக ஏற்றுக் கொள்வார்கள். அவர்களுடைய கருத்துக்களுக்கு எதிரான கருத்துக்களையோ, நம்முடைய கொள்கை சார்ந்த கருத்துக்களை முன்வை த்தாலும் ஒன்றிய அரசால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

பாஜகவின் ஆட்சியில் நாடாளுமன்றத்தில் நாட்கள் தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது. பிரதமர் அவையில் இருக்கக்கூடிய நாட்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அந்த அளவுக்கு குறைவான நாட்கள் தான் நாட்டின் பிரதமர் அவையில் இருக்கிறார். அவர்களுக்கு நாடாளுமன்றத்தின் மீது எந்த அளவுக்கு மரியாதை இருக்கிறது என்பதில் இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

நாளை நிச்சயம் ஆர்ப்பாட்டம் நடைபெறும்!

தொகுதி மறுசீரமைப்பு பிரச்சினை யைத் தொடர்ந்து எழுப்பிக் கொண்டிருக்கிறோம். வரக்கூடிய 22ஆம் தேதி, தமிழ்நாட்டு முதலமைச்சர் முன்னெடுப்பில் நாடு முழுவதும் எந்தெந்த மாநிலங்கள் தொகுதி மறுசீரமைப்பால் பாதிக்கப்படுமோ, அந்த மாநிலங்களைச் சார்ந்த முதலமைச்சர்கள், தலைவர்கள் எல்லோரையும் அழைத்து ஒரு கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்காக சென்னைக்கு அழைத்து இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சூழலில், நாளை நாடாளுமன்ற வளாகத்தில் நிச்சயமாக ஆர்ப்பாட்டம் நடைபெறும். அதைத் தொடர்ந்து, அவையிலும் கருத்துக்களை விவாதிக்க வேண்டும் என்று குரல் எழுப்புவோம். வழக்கம்போல, அவர்கள் அனுமதிப்பார்களா இல்லையா என்பது ஒரு மிகப் பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது.

எங்களுக்கு ஒரு நியாயமான மறுசீரமைப்பு (Fair Delimitation) என்ற உறுதியை ஒன்றிய அரசாங்கம் தெளிவுபடுத்தும் வரை, இந்தப் போராட்டம் தொடர்ந்தது நடைபெறும்.

டிஷர்ட் அணிந்ததால் தமிழ்நாட்டு எம்.பிக்களை இடைநீக்கம் (Suspend) செய்ய வேண்டும் என்று பாஜக எம்.பி நிஷிகாந்த் துபே, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவிடம் கோரிக்கை வைத்துள்ளார் என்று கேள்விக்கு, எதிர்க்கட்சிகள் இல்லாமல் அவையை நடத்த முடியும் என்றால்? எதிர்கட்சியினரை இடைநீக்கம் செய்துவிட்டால், அவர்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய எம்.பிக்கள் மட்டும் தான் அவையில் இருப்பார்கள். எதிர்க்கட்சியினர் இல்லாத அவையை மகிழ்ச்சியுடன் நடத்துவார்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி பதிலளித்தார்.

வலைதளங்களில் வைரலாக வலம் வரும் செய்தி!

பா.ஜ.க.வின் அடியாளாகச் செயல்படும் அமலாக்கத் துறையால்

‘திராவிட மாடல்’ அரசை துரும்பளவும் அசைக்க முடியாது!

சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

சென்னை, மார்ச் 22 – ஆள் பிடிக்கும் பார்முலா தமிழ்நாட்டில் எடுபடாது. முதுகெலும்பில்லாத கோழைகள் பாஜகவிற்கு அடிபணியலாம் ஒருகாலமும் திராவிட மாடல் அரசைத் துரும்பளவு கூட அசைத்துப் பார்க்க முடியாது என்று சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

அமலாக்கத் துறையின் மிரட்டல் உருட்டல்களுக்கெல்லாம் தமிழ்நாடு அஞ்சாது, என்பதை அறியாத ஆதிக்கவாதிகளின் அராஜக நடவடிக்கைக்கு எதிராகத் தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் அமலாக்கத்துறைக் குக் குட்டு வைத்திருக்கிறது உயர் நீதிமன்றம்.

அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான வழக்கிலேயே உச்ச நீதிமன்றத்தால் கடும் கண்டனத்தை எதிர்கொண்ட அமலாக்கத்துறை தற்போது மீண்டும் சென்னை உயர்நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு ஆளாகியிருக்கிறது.

தமிழ்நாட்டின் போர்க்குணத்தை அரசியல் ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் எதிர்கொள்ளத் திராணி இல்லாத பாஜக, தனது அச்சுறுத்தல் ஆயுதத்தை அமலாக்கத் துறை மூலம் நீட்டியது. பாஜகவின் ஆணவத்திற்கான அடிதான் உயர்நீதிமன்றம் இப்போது எழுப்பிய கேள்விகள்.

“இரவில் சோதனை நடக்கவில்லை; அனைவரும் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டனர்; அரசு ஊழியர்கள் யாரையும் நாங்கள் சிறைபிடிக்கவில்லை; யாரையும் துன்புறுத்தவில்லை” என்றெல்லாம் உயர் நீதிமன்றத்தில் அமலாக்கத்துறை சொன்ன போது, “பொய் சொல்ல வேண்டாம். அனைத்தும் செய்தித்தாள்களில் வெளியாகியுள்ளது” என நீதிமன்றம் கண்டித்திருக்கிறது. ‘டாஸ்மாக் முறைகேடு தொடர்பாக மார்ச் 25ஆம் தேதி வரை எந்த மேல் நடவடிக்கையும் எடுக்க கூடாது’ என அமலாக்கத் துறைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

★ எந்த அதிகாரி தவறு செய்துள்ளார் எனத் தெரியாமல் எப்படி அனைத்து அதிகாரிகளையும் நீங்கள் எப்படித் தடுத்து வைக்க முடியும்?

★ அமலாக்கத்துறைக்கு அதிகாரம் இருந்தாலும், அதைச் செயல்படுத்திய விதம் தவறு.

★ அமலாக்கத்துறை சோதனை நடத்தக் காரணமான வழக்குகள், விவரங்களைப் பதில் மனுவில் தெரிவிக்க வேண்டும்.

★ இரவு வரை பெண் அதிகாரியை சிறைபிடித்து சோதனை நடவடிக்கை எடுப்பது அச்சுறுத்தல்.

என்றெல்லாம் கேள்விகளை எழுப்பியிருக்கிறது உயர் நீதிமன்றம்.

எதிர்க் கட்சிகளை மிரட்டுவதற்காக அமலாக்கத் துறை, வருமானவரித் துறை, சி.பி.ஐ, தேர்தல் ஆணையம் போன்ற அதிகார அமைப்புகளைத் தனது கைப்பாவையாக ஒன்றிய பாஜக அரசு பயன்படுத்தி வருகிறது. பாஜக ஆளாத மாநிலங்களில் முகாந்திரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து, அமலாக்கத் துறை பல்வேறு வழக்குகளைப் புனைந்து, எதிர்க்கட்சிகளை முடக்குவதையே தனது முழுநேரப் பணியாகக் கொண்டிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர்களையும், எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த முதல்வர்களையும் கைது செய்து, ஜனநாயகத்திற்கு எதிரான சர்வாதிகார அரசியலை நடத்திக் கொண்டிருக்கும் பாஜகவின் அடியாளாகச் செயல்படுகிறது அமலாக்கத் துறை.

மோடி அரசின் 10 ஆண்டு ஆட்சியில் அரசியல் தலைவர்கள் மீது பதிவு செய்த வழக்குகளின் எண்ணிக்கை 193 ஆனால், இதுவரை 2 வழக்குகளில் மட்டுமே குற்றம் நிரூபிக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதாவது CONVICTION RATE வெறும் 1.03 சதவிகிதம்தான். இதனை நாடாளுமன்றத்திலேயே பாஜக ஒத்துக் கொண்டிருக்கிறது. சோதனைகள், கைதுகள் மூலம் தனது அரசியல் எதிரிகளை மிரட்டிப் பழிவாங்கவும் அவர்களது செயல்பாடுகளை முடக்கவும் அமலாக்கத் துறை அரசியல் சதியை நடத்தி கொண்டிருப்பதைத்தான் CONVICTION RATE வெளிக்காட்டுகிறது.

அமலாக்கத் துறையால் வழக்குகள் பதியப்பட்டவர்கள், பாஜகவில் இணைந்தும், அவர்கள் மீதான நடவடிக்கைகள் நின்றுவிடுவது அமலாக்கத்துறையின் அறிவிக்கப்படாத விதியாகும். அமலாக்கத்துறை சோதனை நடத்துவதும் வழக்கு பதிவதும் முழுக்க முழுக்க பாஜகவுக்கு ஆள்பிடிக்க மட்டுமே. எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களைக் குறிவைத்து சோதனை நடத்துவது அதை வைத்து வழக்கு போடுவேன் எனச் சொல்லி மிரட்டி அவர்களை பாஜகவிற்கு ஆதரவாளராக மாற்றுவது என ஒன்றிய பாஜக அரசின் அடியாள் துறையாக அமலாக்கத்துறை செயல்பட்டு வருகிறது. பாஜகவின் இந்த ED பேர அரசியலுக்கு அடிபணியாதவர்களை மட்டும் சிறையில் வைத்து மிரட்டிப் பார்ப்பது என்ற மிக மிகக் கேடுகெட்ட கேவலமான வேலையை ஒன்றிய பாஜக அரசு செய்து வருகிறது.

அமலாக்கத் துறையை வைத்து பூச்சாண்டி காட்டியதால் பாஜகவோடு இணைந்தவர்களைப் பட்டியல் போட்டால், சுவேந்து அதிகாரி, முகுல் ராய், ஷிண்டே, அஜீத் பவார், பிரேம் காந்த் என அவர்கள் நம்பும் அனுமார் வால் போல அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

வடக்கே அமலாக்கத்துறையை வைத்து பாஜகவிற்கு ஆள் பிடித்த பார்முலாவை இங்கே செய்து பார்க்கலாம் எனக் கணக்கு போடுகிறது பாஜக ஆனால் முதுகெலும்பில்லாத கோழைகள் வேண்டுமானால் பாஜகவின் சித்து விளையாட்டிற்குப் பயந்து பாஜகவை ஆதரித்து அடிபணியலாம் ஆனால், ஒரு காலமும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடைக்கோடித் தொண்டனையோ, திராவிட மாடல் அரசையோ துரும்பளவு கூட அசைத்துப் பார்க்க முடியாது. பல மாநிலங்களில் மேற்கொண்ட அமலாக்கத்துறையின் மிரட்டல் உத்தியைத் தமிழ்நாட்டையும் திமுகவையும் மிரட்டிப்பார்க்கலாம் என நினைத்து, தமிழ்நாட்டின் டாஸ்மாக் நிறுவனத்தில் முகாந்திரமற்ற வகையில் சோதனை மேற்கொண்டது.

தொகுதி மறுசீரமைப்பிற்கு எதிராக முதலமைச்சர் இப்போது எடுத்திருக்கும் முயற்சி நாடாளுமன்ற மட்டுமல்லாது, நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் பல பகுதிகளிலிருந்து கிடைத்திருக்கும் ஆதரவு பாஜகவை நிலைகுலையச் செய்திருக்கிறது. தென் மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை ஒழித்துக்கட்டத் தொகுதி சீரமைப்பின் பெயரால் பாஜக போட்டிருந்த பாசிசத் திட்டத்தை முளையிலேயே முதலமைச்சர் அம்பலப்படுத்திவிட்டார் என்ற ஆத்திரத்திரத்தில் ஆற்றாமையிலும் அமலாக்கத் துறையை ஒன்றிய அரசு ஏவிவிட்டுள்ளது.

நாளை (மார்ச் 22ஆம் தேதி) முதலமைச்சரின் தலைமையில் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு எதிராகப் பல்வேறு மாநில முதல்வர்களும், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த முக்கிய அரசியல் தலைவர்களும் கலந்து கொள்ள இருக்கிற ஆலோசனைக் கூட்டம் பாஜகவின் தூக்கத்தைக் கெடுத்திருக்கிறது. அதனால்தான் அமலாக்கத் துறையை வைத்து மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அமலாக்கத்துறையைப் புனிதமான விசாரணை அமைப்பாகக் காட்டி வந்த பாஜகவின் பிம்பம் தமிழ்நாட்டில்தான் முதல்முறையாகத் துடைத்தெறியப்பட்டது. திண்டுக்கல் மருத்துவரிடம் ரூ.20 லட்சம் லஞ்சம் பெற்ற அமலாக்கத்துறை அதிகாரி அங்கித் திவாரி கைதானார்.

கொள்ளையனோடு கூட்டுச் சேர்ந்த காவலனாக அமலாக்கத்துறை பாஜகவோடு கூட்டு வைத்து, பாஜகவின் குற்றங்களுக்குத் துணை போய்க் கொண்டிருப்பது நாட்டிற்கு நல்லதல்ல.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

சேலம் மருத்துவமனையில் அதி நவீன இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு துவக்கம்!

சட்டப்பேரவையில் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை, மார்ச் 22 – சேலம் மருத்துவமனையில் அதி நவீன இருதய சிகிச்சைப் பிரிவு துவங்கப்பட வுள்ளது என அமைச்சர் மா.சுப்பிரமணியன் உறுப்பினரின் கேள்விக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினரின் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பதில் வருமாறு:

ஆத்தூர் அரசு மருத்துவமனையில் இருக்கிற மருத்துவர்களின் எண்ணிக்கை மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்களின் எண்ணிக்கை அவருக்கு நன்றாக தெரியும். மருத்துவர் காலிப்பணியிடங்கள் இல்லாத நிலை உருவாக்கப்பட்டு இருப்பது என்பது மருத்துவத் துறை வரலாற்றில் இப்போது முதன்முறை. அந்தவகையில் அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் இருக்கிறார்கள். ஏதாவது மேல் சிகிச்சை என்று வருகிறபோதுதான் ஆத்தூரிலிருந்து சேலத்திற்கு Refer செய்வார்களே தவிர எல்லோரையும் சேலத்திற்கு அனுப்பமாட்டார்கள். அந்த உண்மைத் தன்மைகளை அறிந்து உரையாற்றுவது சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ECG எடுப்பதற்கு டாக்டர் இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. டெக்னிசியன் இருந்தாலே போதும். அதேபோன்று மயக்கவியல் நிபுணர் பற்றி சொல்லி இருக்கிறார். அது அருகில் எங்காவது இருந்து Deputationல் இருந்து வந்து செய்வார்கள். அரசு மருத்துவமனைகளுக்கு என்ன அவசிய தேவைகள் இருக்கிறதோ அது அனைத்துமே ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு இருக்கிறது. நானே இரண்டு, மூன்று முறை அந்த மருத்துவமனைக்கு சென்றிருக்கிறேன். அந்த மருத்துவமனையின் கூடுதல் கட்டமைப்பை திறந்து வைத்திருக்கிறேன். இன்னும் கூடுதல் மருத்துவர்கள் தேவைப்படுமானால் நியமிப்பதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது.

சேலம் மாவட்டத்திலிருந்த மருத்துவத்துறையின் நிலவரத்தை உறுப்பினரும் நன்றாக அறிவார்கள். சேலத்தில் இருக்கின்ற மாவட்ட மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், இதுநாள்வரையில் PETCT, Cath lab போன்ற எந்த வசதியும் இல்லாத நிலையில் இருந்ததை அனைவரும் நன்றாக அறிவார்கள். கடந்த 4 ஆண்டுகளில்தான் முதலமைச்சரின் வழிகாட்டுதலின் அடிப்படையில், சேலம் மருத்துவமனை வளாகத்தில் தற்போது PETCT என்ற மிகப் பெரிய புற்று நோயை மிகத் துல்லியமாகக் கண்டு அறிகின்ற கருவியும், கேத்லேப் என்கின்ற அதிநவீன இருதய சிகிச்சைப் பிரிவும் புதிதாக துவங்கப்பட்டுள்ளன. இப்படி பல வசதிகளைச் செய்துக் கொண்டிருக்கிற இந்த அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று கடந்த ஆட்சிக் காலத்தில் திட்ட மிட்டதை தற்போதுவரை நடத்தவில்லையென்று...

அதுபோன்ற எந்தத் தகவலும் இல்லை. பொதுவாகவே, தற்போது அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் red zone, yellow zone, green zone என்று பிரிக்கப்பட்டு, அனைத்து விபத்து பிரிவுகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதற்கென தனியான பிரிவு என்பது National Highways மூலம் ஒரு சில இடங்களில் ஒன்றிய அரசாங்கத்தின் நிதி ஆதாரத்துடன் மேற்கொள்ளப்படும் பணிகள் போன்றவை, உறுப்பினர் கூறுகின்ற ஆத்தூர் தொகுதியில் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

குமாரபாளையம் சட்டமன்ற உறுப்பினரின் கேள்விக்கு

இப்போது அவர் சொல்கிறார், அதற்கு மறுப்பு சொல்ல வேண்டுமென்று இல்லை, ஆனால் உண்மையை சொல்ல வேண்டும் அல்லவா, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் திறந்தார் என்று அவர் சொல்கிறார். இல்லை, தமிழ்நாட்டின் இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்கள். அது தவாறான தகவல். இரண்டாவது, அந்த மருத்துவக்கல்லூரிக்கே தண்ணீர் போகாமல் நகராட்சி கையிலிருந்து தண்ணீர் வாங்கிக் கொடுத்துதான் மருத்துவக் கல்லூரி இவ்வளவு நாட்கள் நடத்திக்கொண்டு வந்தோம். மருத்துவமனைக்கு தண்ணீர் இல்லாத நேரத்தில் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்ச்சியாக அதற்கு கடிதங்கள் கொடுத்து காவிரியிலிருந்து ரூ.9 கோடிக்கு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து அது கடைசியாக ரூ.11 கோடியில் முடிந்து இன்றைக்கு தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து தற்போது 6 மாதங்களுக்கு முன்புதான் மருத்துவமனைக்கு குடிநீரே வந்தது. இந்தத் தகவலைத்தான் நேற்றைக்கு சொன்னோம்.

மருத்துவக் கல்லூரியைத் திறந்தது, நம்முடைய முதல்வர் அவர்கள், அதேபோன்று 500 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையைத் திறந்தது இந்த ஆட்சியில்தான். இதற்கிடையில், குடிநீர் வசதியை புதிதாக ஏற்படுத்தியபிறகுதான் அதனைத் திறக்க முடிந்தது. தற்போதும்கூட, அந்த 11 மருத்துவமனைகளில் ஒன்றான ஊட்டி மருத்துவக் கல்லூரி. அந்த ஊட்டி மருத்துவக் கல்லூரி ஏற்கனவே திறந்து வைக்கப்பட்டிருந்தாலும், அதன் மருத்துவமனையை தற்போதும் திறக்க முடியாத நிலையில், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 7, 8 முறை ஊட்டிக்கு சென்று வந்தார்கள். இவ்வளவு பெரிய கட்டமைப்பை ஏற்படுத்தி, வருகின்ற 5ம் தேதியன்றுதான் முதலமைச்சர் அவர்கள் அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைத் திறந்து வைக்கவிருக்கி றார்கள்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலளித்தார்.

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம் சந்திரசேகரபுரத்தில் ரூ.854.37 கோடி மதிப்பீட்டில் இராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் பணிகள் நடைபெற்று வருவதை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, இராசிபுரம் நகர்மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர், அட்மா குழு தலைவர் கே.பி.ஜெகநாதன், தமிழ்நாடு குடிநீர் வடிவால் வாரிய மேற்பார்வை பொறியாளர் பிரபாகரன், நிர்வாக பொறியாளர்கள் மோகன்தாஸ், ஜெயகோபு, செல்வராசு, உதவி நிர்வாக பொறியாளர் மஞ்சு, உதவி பொறியாளர் சங்கீதா ஆகியோர் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சாம்பியன்ஸ் கோப்பை: இந்திய கிரிக்கெட் அணிக்கு ரூ.58 கோடி பரிசு! பி.சி.சி.ஐ. அறிவிப்பு!

மும்பை, மார்ச் 22 – சாம்பியன்ஸ் கோப்பையை வென்ற இந்திய கிரிக்கெட் அணிக்கு ரூ.58 கோடி பரிசு வழங்கப்படுவதாக பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது. இந்தத் ஆண்டு சாம்பியன்ஸ் கோப்பை தொடர் பாகிஸ்தான் மற்றும் துபாயில் நடைபெற்றது. குரூப் சுற்றில் ஆடிய மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்ற இந்திய அணி, அடுத்து அரையிறுதியில் ஆஸ்திரேலியா அணியையும், இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணியையும் வீழ்த்தி 2025 சாம்பியன்ஸ் டிராபி கோப்பையை கைப்பற்றியது.

அதிகபட்சமாக கேப்டன் ரோகித் சர்மா 76 ரன்கள் அடித்தார். அவரே ஆட்ட நாயகனாகவும் தேர்வு செய்யப் பட்டார்.

இந்த நிலையில், சாம்பியன்ஸ் டிராபியில் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு பி.சி.சி.ஐ. ரூ.58 கோடி பரிசு தொகை அறிவித்துள்ளது. இது இந்த தொடரில் இடம்பெற்றிருந்த வீரர்கள், பயிற்சியாளர்கள், ஊழியர்கள் மற்றும் தேர்வுக்குழு உறுப்பினர்களை கவுரவிக்கும் விதமாக வழங்கப்பட்டுள்ளது.

சென்னை இராஜா அண்ணாமலைபுரம் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் நடைபெற்ற தமிழிசை விழா மற்றும் ஆண்டு விழாவில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சிறப்புரையாற்றினார். உடன் கூடுதல் தலைமைச்செயலாளர் மரு.க.மணிவாசன் இசைக் கல்லூரி முதல்வர் (பொ) முனைவர் பா.சாய்ராம் ஆகியோர் உள்ளனர்.